**100 % வாக்களிக்க உறுதி செய்வோம்!**
**ENSURE 100% VOTING!**

**பெருநகர சென்னை மாநகராட்சி**
**தேர்தல் செய்தி வெளியீடு**

**தே.செ.வெ.எண். 24** **நாள்: 15.04.2019**

**2019 பாராளுமன்ற பொதுத்தேர்தலில் வாக்குச்சாவடி அலுவலர்கள் பணிபுரிய வேண்டிய வாக்குச்சாவடி எண் அடங்கிய இறுதி ஆணை 17.04.2019 அன்று உதவி தேர்தல் நடத்தும் அலுவலர்களிடம் ஒப்படைக்கப்படும் என மாவட்ட தேர்தல் அலுவலர்/ஆணையாளர் திரு.கோ.பிரகாஷ், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.**

இந்திய தேர்தல் ஆணையம் வெளியிட்டுள்ள அட்டவணைப்படி 2019ம் ஆண்டிற்கான பாராளுமன்ற பொதுத்தேர்தல் சென்னை மாவட்டத்தில் வருகின்ற 18.04.2019 அன்று நடைபெற உள்ளது.

பொதுத்தேர்தல் பணிக்காக சுமார் 20,000–க்கும் மேற்பட்ட மத்திய மற்றும் மாநில அரசு ஊழியர்கள் தேர்வு செய்யப்பட்டு ஏற்கனவே மூன்றுகட்ட பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. மேற்படி பணியாளர்கள் பணிபுரிய வேண்டிய வாக்குச்சாவடி எண் அடங்கிய இறுதி ஆணை இந்திய தேர்தல் ஆணைய பார்வையாளர் முன்னிலையில் தயார் செய்யப்பட்டு, 17.04.2019 அன்று உதவி தேர்தல் நடத்தும் அலுவலர்களிடம் ஒப்படைக்கப்படும்.

வாக்குச்சாவடியில் பணியமர்த்தப்பட்டுள்ள அலுவலர்கள் 17.04.2019 அன்று காலை 10.00 மணிக்கு வாக்குச்சாவடி பொருட்கள் அனுப்பும் மையத்தில் ஆஜராகி தங்களது ஆணையினை பெற்றுக் கொள்ளுமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள். மேலும், மையம் குறித்த தகவல் அனைத்து வாக்குச்சாவடி அலுவலர்களுக்கும் குறுஞ்செய்தியாக அனுப்பப்பட்டுள்ளது. குறுஞ்செய்தி 16.04.2019 அன்று மாலை 5 மணிக்குள் கிடைக்கப்பெறாதவர்கள் அவரவர் குழுவில் உள்ள மற்ற வாக்குச்சாவடி அலுவலர்களை தொடர்பு கொண்டு கேட்டறியலாம்.

தேர்தல் கடமையை மீறுவது என்பது இந்திய பிரதிநிதித்துவச் சட்டம் 1951, பிரிவு–124ன்படி குற்றவியல் நடவடிக்கைக்கு வழிவகுக்கும். எனவே, இந்த பாராளுமன்ற பொதுத்தேர்தல் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ள அனைத்து அரசு ஊழியர்களும் அவரது கடமையிலிருந்து மீறாமல் சிறப்பாக பணியாற்றிட வேண்டும் என மாவட்ட தேர்தல் அலுவலர்/ஆணையாளர் திரு.கோ.பிரகாஷ், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**செய்தி வெளியீடு : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி**